TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102041

1. District : மாவட்டம் MADURAI PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 3/18 Date: நாள் 13.01.2018

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 Sections பிரிவுகள்: 7, 13(2) r/w 13(1)(d) of PC Act 1988
(ii) Act சட்டம்: Cr. P.C. Sections பிரிவுகள்: 102 crPc.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.01.18 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Before 1840 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.01.2018 Time : நேரம் 1300 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.01.2018 Time : நேரம் 1300 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக WRITTEN

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 3 km South
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the District Registrar (South), Near Thirumalai Naicker mahal, Madurai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. THIRUNAVUKARASU (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் SUNDARA MOORTHY
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 02.06.65 (d) Nationality நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி Deputy Inspection Cell officer, Madurai District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. PaulPandi, District Registrer (South)
2. Tr. Arun mahesh, E2 Assistant
3. Tmt. Rajalthilagam, B1 Assistant
4. Tr. Mahaboob Batcha, Masalji,
Office of the District Registrar (South) Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

A seperate sheet in Page No. 3 to 5 is enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 13.1.18

A. Kannan
INSP. V.RAC
13.1.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 13.01.2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1500 hrs.

Name: பெயர் A. KANNAN
Rank: நிலை Inspector No. எண் V.RAC. madurai.

இன்று 13.01.2018-ம் தேதி நான் (அ. கண்ணன்), மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்தபோது, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. சு. திருநாவுக்கரசு அவர்கள் அலுவலக ந.க. எண். **I1/81/2018** நாள் : 13.01.2018 -ன் கீழ் அளித்த புகார் மனுவை மதுரை ஊ.த.க. பிரிவு, காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் பெற்று நடவடிக்கை எடுக்குமாறு என்னிடம் கொடுத்த மேற்படி புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களை பெற்று பார்வையிட்டதில் புகார் மனுவில் உள்ள விவரம் பின்வருமாறு : அனுப்புநர், திரு. சு. திருநாவுக்கரசு, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை. பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண். **I1/81/2018** நாள் : 13.01.2018 அய்யா, பொருள்: திடீர் இணை ஆய்வு - மதுரை, மாவட்ட பதிவாளர் (தெற்கு) பத்திரப்பதிவு அலுவலகத்தில் 12.01.2018-ம் தேதி மாலை 06.40 மணி முதல் இரவு 11.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தொடர்பாக. பார்வை : மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் செயல்முறை நடவடிக்கைகள் நாள் : 12.01.2018. 12.01.2018-ம் தேதி மாலை, மதுரை, மாவட்டப் பதிவாளர் (தெற்கு) பத்திரப்பதிவு அலுவலகத்தில் நடைபெற உள்ள சார்பதிவாளர்களுக்கான கூட்டத்தில் மாவட்டப் பதிவாளர் திரு. பால்பாண்டி சார்பதிவாளர்களிடம் பணம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், 12.01.2018-ம் தேதி மாலை 06.40 மணிக்கு, நானும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர்கள் மற்றும் பார்ட்டி சகிதம் மதுரை திருமலை நாயக்கர் மஹால் அருகில் உள்ள மாவட்டப் பதிவாளர் (தெற்கு) பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்று திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வின் போது, மாவட்டப் பதிவாளர் அறைக்கு வெளியில் நின்ற திருப்பரங்குன்றம் சார்பதிவாளர் திரு. காஜா முகைதீன் என்பவரை விசாரித்ததில், மாவட்டப் பதிவாளர் திரு. பால்பாண்டி அவர்களுக்கு கொடுப்பதற்காக ரூ.5,000/- கொண்டு வந்ததாக கூறினார். எனவே அந்த பணம் ரூ.5,000/-த்தை கைப்பற்றினேன். அரசரடி சார்பதிவாளர் அலுவலகத்தின் உதவியாளர் திரு. கருப்பசாமி என்பவரை விசாரித்ததில், அரசரடி மாவட்டப் பதிவாளர் திரு. கோபால கிருஷ்ணன் கூட்டத்திற்கு வர இயலாத காரணத்தால் அவர் ரூ.18,000/-த்தை மாவட்டப் பதிவாளர் திரு. பால்பாண்டி அவர்களிடம் கொடுத்துவிடுமாறு தன்னிடம் கொடுத்ததாக கூறினார். எனவே அந்த பணம் ரூ.18,000/-த்தை கைப்பற்றினேன். கள்ளிக்குடி சார்பதிவாளர் திரு. பாலமுருகன் என்பவரை விசாரித்ததில், மாவட்டப் பதிவாளர் திரு. பால்பாண்டி அவர்களுக்கு கொடுப்பதற்காக ஒரு வெள்ளை நிற கவரில் ரூ.3,000/- (500 ரூபாய் நோட்டுக்கள் -6) கொண்டு வந்ததாக கூறினார். எனவே அந்த பணம் ரூ.3,000/-த்தையும், வெள்ளை நிற கவரையும் கைப்பற்றினேன். மதுரை மாவட்டப் பதிவாளர் (தெற்கு) அலுவலக இ2 உதவியாளர் திரு. அருண் மகேஸ் என்பவரிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.1,510/-ம், பி1 உதவியாளர் திருமதி. ராமதிலகம் என்பவரிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.1,500/-ம், மசால்ஜி திரு. மகபூப் பாட்சா என்பவரிடமிருந்து கணக்கில் வராத

பணம் ரூ.3,790/-ம் கைப்பற்றினேன். பேரையூர் சார்பதிவாளர் திரு. ரமேஸ்பாபு, என்பவரை விசாரித்ததில், திடீர் ஆய்வுக் குழுவினர் வருவதற்கு சற்று நேரம் முன்னதாக, மாவட்டப் பதிவாளர் திரு. பால்பாண்டி அவர்களிடம் தான் வழக்கம் போல ரூ.3,000/-த்தை இரண்டாயிரம் ரூபாய் நோட்டு -1, ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் -2 யை கொடுத்ததாகக் கூறினார். இது குறித்து மாவட்டப் பதிவாளர் (தெற்கு) திரு.பால்பாண்டி, அவர்களிடம் கேட்ட போது, தனது பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.3,000/- (இரண்டாயிரம் ரூபாய் நோட்டு -1, ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் -2) தனது சொந்தப் பணம் என்று கூறினார். ஆனால், அவர் பணியாளர் பணம் கையிருப்புப் பதிவேட்டில் எவ்வளவு பணம் கையிருப்பு உள்ளது எனக் குறிப்பிடவில்லை. மேலும், திரு.ரமேஸ்பாபு அளித்த வாக்குமூலத்தின் படி மேற்படி ரூ.3,000/-ஐ மாவட்டப் பதிவாளர் சற்று முன்னர் ரமேஸ்பாபுவிடமிருந்து பெற்றார் எனத் தெரியவந்ததன் பேரில் மேற்படிபணம் ரூ.3,000/-ம் கைப்பற்றினேன். மேலும், அவரது இருக்கை மேடைக்கு கீழே கிடந்து எடுக்கப்பட்டபணம் ரூ.4,100/- குறித்து மாவட்டப் பதிவாளர் திரு.பால்பாண்டியிடம் கேட்டபோது தனக்கு தெரியாது என்று கூறியதன் பேரில் மேற்படி கணக்கில் வராத பணம் ரூ.4,100/-யும் கைப்பற்றினேன். திரு.பால்பாண்டி, மாவட்டப்பதிவாளர் (தெற்கு) அவர்களிடமிருந்தும், அங்கு கூட்டத்திற்கு வந்திருந்த சார்பதிவாளர்கள், உதவியாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர் (தெற்கு) அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் வசமிருந்து கீழ்கண்டவாறு பணம் கைப்பற்றப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.பால்பாண்டி, மாவட்டப் பதிவாளர் (தெற்கு),மதுரைமாவட்டம் | ரூ.7,100/- |
| 2. | திரு.காஜா முகைதீன், சார் பதிவாளர், திருப்பரங்குன்றம் | ரூ. 5,000/- |
| 3. | திரு.கருப்பசாமி, உதவியாளர், அரசரடி சார் பதிவாளர் அலுவலகம் | ரூ.18,000/- |
| 4. | திரு.பாலமுருகன், சார் பதிவாளர்,கள்ளிக்குடி (வெள்ளைநிறக் கவரில் இருந்தது) | ரூ. 3,000/- |
| 5. | திரு.அருண் மகேஸ், இ-2 உதவியாளர், மாவட்டப் பதிவாளர் (தெற்கு), மதுரை | ரூ. 1,510/- |
| 6. | திருமதி.ராஜதிலகம், பி-1 உதவியாளர், மாவட்டப் பதிவாளர் (தெற்கு), மதுரை | ரூ. 1,500/- |
| 7. | திரு.மகபூப் பாட்சா, மசால்ஜி, மாவட்டப் பதிவாளர் (தெற்கு), மதுரை | ரூ. 3,790/- |
| | மொத்தம் | ரூ. 39,900/- |

மேலும் விசாரணையில், அனைத்து சார் பதிவாளர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் நடைபெறும் போது வழக்கமாக மாவட்டப் பதிவாளர் திரு.பால்பாண்டி அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பணம் கொடுப்பது வழக்கம் என்றும், அரசரடி மாவட்டப் பதிவாளர் நிலை என்பதால் அவர் மட்டும் ரூ.20,000/-கொடுப்பது வழக்கம் என கூறினார்கள். மேற்படி திடீர் இணை ஆய்வு சம்மந்தமாக மாலை 6.40 மணி முதல் இரவு 11.00 மணி வரை திடீர் இணை ஆய்வு நடவடிக்கை குறிப்பு தயாரிக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கை குறிப்பு, மேலே கூறிய கைப்பற்றப்பட்ட மொத்தப்பணம் ரூ.39,900/-, திரு.பாலமுருகன் என்பவர் ரூ.3,000/-ம் வைத்திருந்த வெள்ளை நிறக் கவர், மாவட்டப் பதிவாளர் (தெற்கு) அலுவலகத்தில் நடைமுறையில் உள்ள பணியாளர்கள் கையிருப்புப் பதிவேடு - 2018, அரசரடி, திருப்பரங்குன்றம் சார் பதிவாளர் அலுவலகங்களில் நடைமுறையில் உள்ள தனிநபர் பண

இருப்புப் பதிவேடுகள் மற்றும் அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். Sd/- (சு. திருநாவுக்கரசு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை. இணைப்பு : மேற்கண்டவாறு. Received (s-d) R.Pandiarajan, 13/01/18, DSP. Inspr. Tr. A. Kannan to register a case and investigate (s-d) R.Pandiarajan, 13/01/2018 D.S.P., V&AC, Madurai.

Sir received the petition on 13.01.2018 at 13.00 hrs., and registered a case in Madurai V&AC Cr. No. 03/2018 u/s 7, 13 (2) r/w 13 (1) (d) of P.C. Act 1988 and 102 Cr.PC. (s-d) A. Kannan, Inspr. / V&AC. 13/1/18.

The original FIR is submitted to the Hon'ble Special judge, Special court for the Trail of Prevention of Corruption Act cases, Madurai and copies were sent to the officers concerned.

A. Kannan
INSPR V&AC
13/1/18.

[A. KANNAN]
Inspector of Police,
V&AC, Madurai.